**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No.239/2011</u>**

**<u>நாள்.19.06.2026</u>**

**<u>பி.வா.சா. 1</u>- சொர்ணத்தாய்**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் எந்த ஊரில் இருக்கிறேன் என்றால் பெருங்கோட்டூர். சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் என்பவர் என் கணவர் மாரியப்பத்தேவரின் தந்தை என்றால் சரிதான். சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் மனைவி முத்துமாலையம்மாள் என்றால் சரிதான். சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் மனைவி முத்துமாலையம்மாள் ஆகியோருக்கு பிறந்தவர்கள் மாரியப்பத்தேவர், வெள்ளத்தாய் என்ற பாப்பம்மாள், பொன்னுத்தாய் என்றால் சரிதான் பாப்பாம்மாள் இறந்துவிட்டார். மாரியப்பத்தேவரின் முதல் மனைவி அங்கம்மாள் என்றால் சரிதான். முதல் மனைவி அங்கம்மாளுக்கு வாரிசுகள் உண்டா என்றால் ஆமாம், 2 மகன்கள் மாரிமுத்து, முத்தையா. மாரிமுத்து, முத்தையா தான் இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மாரியப்பத்தேவரின் 2 வது மனைவி முத்துலட்சுமி என்றால் சரியல்ல நான் தான் அங்கம்மாளுக்கு அடுத்த மனைவி. மாரியப்பத்தேவரின் 2 வது மனைவி முத்துலட்சுமி இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாரியப்பத்தேவரின் 3 வது மனைவி நான் என்றால் சரியல்ல 2 வது மனைவி. மாரியப்பத்தேவருக்கும் எனக்கும் இரண்டாவதாக நடைபெற்ற திருமண சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்திருக்கலாம், இருக்கும். எனது திருமண சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மாரியப்பத்தேவரின் மனைவி என்பதற்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 4 முதல் 8 பிரதிவாதிகளின் பிறப்புச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுக்க சொல்லியிருந்தேன். 4 முதல் 8 பிரதிவாதிகளின் பிறப்புச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்திருப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்துக்களின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை அதனால் தெரியாது. வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் எனது மாமனார் சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் என்பவருக்கு கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது மாமனார் சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் உயிருடன் இருக்கும்போது எனது கணவருக்கு ஆவணம் ஏதாவது எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம் உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயிலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் உயில் உள்ளது அதை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது மாமனார் சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் உயிருடன் இருக்கும்போது எனது கணவருக்கு உயில் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மாமியார் எழுதிய பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சொத்துக்கள் அனைத்தும் எனது மாமனார் சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் என்பவருக்கு கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என சொல்லி தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் உயிருடன் இருக்கும்போது தனது மனைவிக்கு ஆவணம் ஏதாவது எழுதி வைத்துள்ளாரா என்றால் ஆமாம் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் ஆனால் நான் படிக்கவில்லை என்பதால் அந்த ஆவணம் என்ன ஆவணம் என்று தெரியாது. சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் உயிருடன் இருக்கும்போது யாருக்கும் எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சொத்துக்கள் அனைத்தும் எனது மாமனார் சுடலைமுத்து தேவர் என்ற சொள்ளமுத்து தேவர் என்பவருக்கு கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என சொல்லி எழுதப்பட்டுள்ள நிலையில் எனது மாமியாருக்கு அவரது கணவர் சொத்துக்கள் குறித்து ஆவணம் பிறப்பிக்க எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் மோசடியாக பாத்தியமில்லாத நபர்களால் பாத்தியமில்லாத நபர்களுக்கு பிறப்பிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை அதன்படி அவரது பேரன்மார்கள் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்து பேரன்மார்களுக்கு பட்டா வந்துள்ளதா என்றால் அதை எனது பிள்ளைகளிடம் தான் கேட்க வேண்டும் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை அதன்படி அவரது பேரன்மார்கள் பெயரில் பட்டா வரவில்லை அதனால் தான் நீதிமன்றத்தில் பட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் எனது கணவரின் முதல்தார பிள்ளைகள் அ.வ.எண்.94/2007 வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்தபிறகு நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பென்ஷன் கேட்டு நீதிப்பேராணை மனு எண்.4925/2012 தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம் தாக்கல் செய்து நான் தான் பென்ஷன் வாங்குகிறேன். மேற்படி வழக்குகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் 25 வருடங்கள் ஆகிறது. எனது கணவர் உயிருடன் இருக்கும்போது தனது பிள்ளைகளுக்கு சொத்துக்களை விட்டுக்கொடுத்ததாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் அது எந்த வருடம் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் வருடம் தெரியவில்லை. மற்ற வாரிசுகள் இருக்கும்போது மாரியப்பத்தேவர் பெயரில் பட்டா வருவாய்த்துறையை வசப்படுத்தி மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. மற்ற வாரிசுகள் இருக்கும்போது மாரியப்பத்தேவர் பெயரில் ஏற்பட்ட பட்டா வாதிகளைக் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன்பாக பாகம் கேட்டு வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ன் படி இந்த வழக்கிற்கு முன்பாக பாகம் கேட்டு வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் அதற்கு நான் வா.சா.ஆ.4 ன் படி பொய்யாக சங்கதிகள் சொல்லி வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

வாதிகளுக்கு 2/3 பங்கு உண்டு அதை மோசடி செய்ய பி.வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் வாதிகளுக்கு வழக்கில் கேட்டவாறு பரிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.19 17:59:27 +0530